

கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (08.09.2024) நடைபெற்ற கழக ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்தில் காணொலிக் காட்சி வாயிலாகப் பங்கேற்றார். இதுகுறித்து முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், **"திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டதன் 75ஆம் ஆண்டு நிறைவு விழா, முப்பெரும் விழா ஏற்பாடுகள், ஒருங்கிணைப்புக் குழுவின் அடுத்தகட்டப் பணிகள் குறித்து ஆலோசித்தோம்"** என்று குறிப்பிட்டுள்ளார். இக்கூட்டத்தில் அமைச்சர்களும்–ஒருங்கிணைப்புக் குழுவின் உறுப்பினர்களுமான கே.என். நேரு, எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் கே.என்.நேரு தலைமை! இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. எஸ்.ஆர்.சிவலிங்கம் முன்னிலை!

# சேலம் மேற்கு மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிக்கை!

சேலம், செப். 10-

சேலம் மேற்கு மாவட்ட கழக செயலாளர், டி.எம். செல்வகணபதி எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு



சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் 12.09.2024 வியாழக்கிழமை மதியம் 3.00 மணியளவில், சங்ககிரி, பவானி மெயின்ரோட்டில் உள்ள ஸ்ரீ வாசுதேவ் மஹால் திருமண மண்டபத்தில், கழக முதன்மைச் செயலாளர், நகர்ப்புற வளர்ச்சி துறை மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே. என். நேரு தலைமையில், சேலம் மத்திய மாவட்டக் கழக செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., சேலம் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், இந்நாள் -முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்நாள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, மருத்துவ அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, நெசவாளர் அணி, தொண்டர் அணி, வர்த்தகர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை, மீனவர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் தலைவர், துணை தலைவர், அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், பாகநிலை முகவர்கள் (BLA 2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) கழக முன்னோடிகள் மற்றும் கழக செயல்வீரர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 17.09.2024 அன்று சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ திடலில் நடைபெறும் தி.மு.க பவள விழா ஆண்டு மற்றும் கழக முப்பெரும் விழாவில் கலந்து கொள்வது குறித்து.

நாற்பதுக்கு நாற்பது வென்ற தொடர் வெற்றி நாயகர் நம் கழக தலைவர் அவர்களுக்கு வாழ்த்து தெரிவிப்பதை குறித்து.

2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து.

தொகுதிவாரியாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலை திறப்பது குறித்து.

கழக புதிய கொடிகம்பங்கள் அமைத்தல் மற்றும் சுவர் விளம்பரங்கள் குறித்து.

இல்லம்தோறும் இளைஞர் அணி சேர்த்தல் குறித்து.

மாணவ, மாணவியர் பயன் பெறும் வகையில் நூலகம் அமைப்பது குறித்து.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் பணிகள் குறித்து.

கழக ஆக்கப்பணிகள் குறித்து.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.







